# OS.No.206/2023, Dated 15.07.2025

The witness sworn under Oaths Act 1969 on this the 15th day of July 2025.

**வா.சா.1 -வேலு த/பெ. வெங்கடாச்சலம் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் பணம் கடனாக கொடுத்ததற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனே். பிரதிவாதியின் நண்பர் எனக்கு பழக்கம் ஆவார். பிரதிவாதியின் கணவர் கேட்டதால்தான் இந்த பணத்தை கொடுத்தேன் என்றால் சரிதான். ஆனால் பிரதிவாதியும் உடன் இருந்தார். நான் ரூ.3,50,000/- கடனாக கொடுத்தேன். 12.06.2012 அன்று நான் அந்த பணத்தை கடனாக கொடுத்தேன். அந்த பணத்தை ஜெயபிரகாஷ் வாங்கினார் என்றால் சரிதான். அப்போது பிரதிவாதியும் உடன் இருந்தார். அந்த அடமான பத்திரத்தில் கையெழுத்து மட்டுமே பிரதிவாதியிடம் பெறப்பட்டது என்றால் பிரதிவாதி கையெழுத்து போட்டார் அவரது கணவர் சாட்சி கையொப்பம் போட்டார். நான் ஒரு பைசா வட்டி என்று அந்த கடன் ஆவணத்தில் எழுதியிருந்தேன். எவ்வளவு தொகை கடன் பெறப்பட்டது என்றும், எவ்வளவு வட்டி விகிதம் என்றும், பிரதிவாதிக்கு தெரியாது என்றால் அவர் உடன் இருந்ததால் அவருக்கு தெரியும். அந்த அடமான பத்திரத்தில் ஒரு பைசா வட்டி என்று எழுதிவிட்டு நான் பிரதிவாதியிடம் மூன்று பைசா பெற்றேன் என்றால் இல்லை. வட்டி விகிதம் குறித்து பிரதிவாதியின் கணவரிடம் தான் பேசினேன் என்றால் சரிதான். அடமான கடனுக்கு 2012 லிருந்து 2018 வரை நான் மாதம் மாதம் வட்டி வாங்கினேன் என்றால் இல்லை. நான் மாதம் மாதம் அத்தொகைக்கு ரூ.10,000/- வட்டி வாங்கினேன் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை. அடமான பத்திரத்தை யார் தயார் செய்தார் என்றால் பாஸ்கர் என்பவர் தயார் செய்தார்.அந்த பத்திரத்தில் நானும் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் கையொப்பம் செய்துள்ளேன். அந்த பத்திரத்தில் ஜெயபிரகாசம், சிவகுமாரும் சாட்சிகளாக கையொப்பமிட்டுள்ளார்கள். அதில் முதலாவதாக ஜெயபிரகாஷ் கையொப்பமிட்டுள்ளார். இரண்டாவதாக சிவக்குமார் சாட்சி கையொப்பம் போட்டார். அவரது ஊர் கொடுங்காலூர் ஆகும். அடமானப்பத்திரம் எழுதப்போகிறோம் என்று சாட்சியை நான் அழைத்தேனா என்றால் ஜெயபிரகாஷ் அழைத்து வந்தார். நான் சாட்சி யாரையும் அழைத்து வரவில்லை. நான் சாட்சிகள் யாரையும் விசாரிக்க போவதில்லை. வேறு நபர்கள்

அங்கு இருந்தார்களா என்றால் இல்லை. அடமான பத்திரத்தில் என்ன சொத்தை எழுதிக்கொடுத்துள்ளார்கள ் என்றால ் தாழம்பள்ளத்தில ் உள்ள சொத்தை எழுதிக்கொடுத்துள்ளார்கள். அதன் சர்வே எண் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. அவர்கள் 1 ஏக்கர் சொத்தை அடமானமாக எழுதிக்கொடுத்தார்கள். நான் தான் 1 ஏக்கர் சொத்தை அடமானமாக எழுதிக்கொடுக்கும்படி கேட்டேனா என்றால் அவர்கள் தன்னிடம் 1 ஏக்கர் சொத்து தான் உள்ளது என்பதால் அதை எழுதிக்கொடுப்பதாக சொன்னார்கள். அந்த இடத்தின் ஐக்குபந்தி எனக்கு ஞாபகம் இல்லை. அது புஞ்சை நிலமாகும். அடமான கடன் பற்றி பிரதிவாதிக்கு எதுவும் தெரியாது என்றாலும், நானும் அவரது கணவரும் சேர்ந்துதான் இந்த அடமானத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. நான் மாதம் 3 பைசா வட்டி பெற்று வந்தேன் என்றாலும், வழக்கிற்காக இல்லை என்று சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. சாட்சிகளை அழைத்து விசாரித்தால் இவ்வழக்கை பற்றிய உண்மை தெரிய வரும் என்றால் சரிதான். நான் சாட்சிகளை அழைத்து விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால ் தாயராக உள்ளேன். நான ் பொய்யான தகவலுடன ் இவ்வழக்கை தாக்கல ் செய்துள்ளதால ் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னா ் சாட்சியால ் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தாா்.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2025.07.15 05:36:12 +0530

சாா்பு நீதிபதி,
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.